தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

(பதினான்காவது சட்டமன்றப் பேரவை)



உறுப்பினர்கள் குறிப்பு (2011 - 2012)

எண். 1. முதல் 11. வரையிலான

அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை - 600 009.


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

9–11–2011 ஆம் நாளன்று விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 13 FEB 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

9–11–2011 ஆம் நாளன்று விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	v-vi
	இணைப்பு-I	1–35
	இணைப்பு-II	37–65
	இணைப்பு-III	67–80

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கோ. காயத்ரி	..	இணைச் செயலாளர்
திரு. ப. மனோகரன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

முன்னுரை

2011–2012–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14–07–2011–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 9–11–2011–ஆம் நாளன்று விழுப்புரம் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அம்மாவட்டத்திலுள்ள பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 104 மனுக்கள் மீது அறிக்கை அனுப்பக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 74 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 09–ஆம் நாளன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர், திருமதி கா.த. மணிமேகலை, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், சம்பந்தப்பட்ட மனுதாரர்களும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அரசுத்துறை அலுவலர்களும், குழு முன் விளக்கமளித்தனர்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற 74 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 35 மனுக்கள் குறித்துக் குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 27 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவை படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 12 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாகக் கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

குழுவின் பரிந்துரைகள்

குழு ஆய்வு செய்து பரிந்துரை வழங்கிய பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில மனுக்களைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) மனு எண். 116– தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் அமைப்பது சம்பந்தமாக

மேற்காணும் கோரிக்கைக்கு பதிலளித்த விழுப்புரம் மாவட்டம், திட்ட அலுவலர் அவர்கள், மேற்படி பாலம் கட்டுவதற்கு ரூ. 18 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் இப்பாலத்தைக் கட்ட சிறப்பு நேர்வாக கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையினையும், துறையின் விளக்கத்தினையும் ஆய்வு செய்த குழு, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதன் அவசியம் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாலத்தினைக் கட்டி முடிக்க தொடர் நடவடிக்கைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

(2) மனு எண் 132 – திருக்கோவிலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக.

மேற்காணும் கோரிக்கைக்கு பதிலளித்த சார்–ஆட்சியர், தற்போது உள்ள பேருந்து நிலையத்திற்கு எதிரே 2.8 ஏக்கர் நிலம் தானமாக பெறப்பட்டுள்ளது எனவும், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அனுகு பாதைக்கான நிலம் தானம் பெற்ற பின்னர் அரசுக்கு பிரேரணை அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையினையும் துறையின் விளக்கத்தினையும் ஆய்வு செய்த குழு, திருகோவிலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க இடம் தெரிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குழு பரிந்துரைப்பதோடு பேருந்து நிலையத்தை விரிவாக்க செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அரசு செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9 அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது.

(3) மனு எண் 200 – சிறுவத்தூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்டித்தரக் கோரியது.

மேற்காணும் கோரிக்கைக்கு பதிலளித்த கள்ளக்குறிச்சி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் திட்ட அலுவலர் அவர்கள், சிறுவத்தூர் கிராமத்தில் காலனி பகுதியில் ஏற்கெனவே சமுதாயக்கூடம் பயன்பாட்டில் உள்ளதெனவும், ஊர் பகுதி மக்களுக்குத் தேவைப்படும் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கும் பட்சத்தில், அப்பணியைச் செய்யலாம் எனவும் தெரிவித்தனர். கள்ளக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இதற்காக நிதி ஒதுக்குவதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கோரிக்கையினையும், துறையின் விளக்கத்தினையும் ஆய்வு செய்த குழு, கள்ளக்குறிச்சி வட்டம் சிறுவத்தூர் கிராமத்தில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்வதாக குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதனை தொடர்ந்து, அந்நிதியினை உரிய முறையில் பெற்று, மேற்படி சமுதாயக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு விழுப்புரம் மாவட்டம், திட்ட அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்துள்ளது.

(4) மனு எண் 2725 – கள்ளக்குறிச்சியிலிருந்து கூத்தக்குடி செல்லும் சாலையில், நினையூருக்குச் செல்ல சாலை அமைத்துத்தரக் கோருதல்.

மேற்காணும் கோரிக்கைக்கு பதிலளித்த விழுப்புரம் கோட்ட மாவட்ட வன அலுவலர் அவர்கள், மேற்படி சாலை காப்புக்காட்டில் உள்ளதென்பதால், வன பாதுகாப்புச் சட்டத்தின் படி, மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பி ஒப்புதல் பெற்ற பின்னரே பணி மேற்கொள்ள இயலும் என்று தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையினையும் துறையின் விளக்கத்தினையும் ஆய்வு செய்த குழு, மேற்படி சாலை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் சென்னையிலுள்ள முதன்மை வன பாதுகாப்பு அதிகாரியின் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை எடுக்க விழுப்புரம் கோட்டம், மாவட்ட வன அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது.

31–01–2012–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

சென்னை–600 009,
31–01–2012,
தைத் திங்கள் 17 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	113	திருமதி விசாலாட்சி முத்துக்கிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர், கொஞ்சிமங்கலம், கிளியனூர் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–604 102.	வானூர் வட்டம், கொஞ்சிமங்கலம் ஏரி கலிங்கல் வடிகால் ஓடையை தூர்வாரி மண்தடுப்பாணை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மனுதாருடன் 03–11–2011 அன்று, விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொஞ்சிமங்கலம் ஏரி கலிங்கல் ஓடையை ஆய்வு செய்ததில், வடிகால் ஓடைக்கு குறுக்கே மண் தடுப்பணை கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டப்பட்டு உள்ளது. இதனை வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மூலம் ஆய்வு செய்து அத்துமீறல்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, அனுப்பி, விரைவில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வரத்துக்கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றிய பின் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் தூர்வாரி செப்பனிடப்படும். கிராம பஞ்சாயத்து தலைவரை பொதுமக்களுடன் கூட்டம் கூட்டி தற்காலிகமாக தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விட நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. *[செயற்பொறியாளர், நீ.ஆ.து., கீழ்பெண்ணையாறு வடிநில கோட்டம், விழுப்புரம், 740 எம். கோ/249/2011/இவ.அ–1/நாள் : 04–11–2011.]*	விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொஞ்சிமங்கலம் ஏரி கலிங்கல் ஓடையிலுள்ள ஆக்கிரமிப்புகளை 10 நாட்களில் அகற்றி IAMWARM திட்டத்தில் தூர்வாருவதாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் ஆய்வின்போது உறுதியளித்துள்ளதால் பணி நிறைவேற்றப்பட்டதற்கான அறிக்கையினை குழுவிற்கு அளிக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	116	திரு. பி. பெருமாள்ராஜ், த/பெ. பிச்சைக்காரன், அக்ரஹார வீதி, பையூர் அஞ்சல், (வழி) திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர் வட்டம்.	தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது–சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. பையூர், கொங்கராயனூர் மற்றும் மாரங்கியூர் கிராமங்கள் தென்பெண்ணை ஆறு மற்றும் கோரையாறுகளால் சூழப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் இம்மூன்று கிராமங்கள் போக்குவரத்து இன்றி வெள்ளத்தால் தனியாக துண்டிக்கப்பட்டுவிடும். இதனால் கோரையாற்றின் குறுக்கே நெடுஞ்சாலை துறை மூலமாக பாலம் கட்டும் பணி துவக்கப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இதனால் மழைக்காலங்களில் இப்பகுதியில் உள்ளவர்கள் இப்பாலத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த பாலத்தின் மூலமாக திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிக்கு சென்றபின்னரே முகையூர் ஊராட்சி ஒன்றிய பகுதிக்கு வர இயலும். ஆனால் கொங்கராயனூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டினால் மாரங்கியூர், பையூர் மற்றும் கொங்கராயனூர் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 11000 பொதுமக்கள் பயனடைவார்கள்.

இந்த இடம் ஏற்கெனவே கட்டப்பட்டு வரும் பாலத்திற்கு சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தற்போது இந்த இடத்தில் தரைப்பாலம் ஒன்று உள்ளது. இதன் நீளம் 280 மீட்டர் இதனை மழைக்காலத்தில் பயன்படுத்த இயலாது. எனவே புதிய பாலம் கட்டுவதற்கு தோராயமாக 16 கோடி செலவாகும். முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில போதுமான நிதி இல்லாத காரணத்தினால் நபார்டு நிதியில் இப்பணியினை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) முகையூர் ஊராட்சி ஒன்றியம், (இ) மணம்பூண்டி அவர்களின் கடித எண். அ5/2425/2011, நாள் : 02–10–2011]

குழுவின் பரிந்துரை.
(6)

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதன் அவசியம் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாலத்தினைக் கட்டி முடிக்க தொடர் நடவடிக்கைக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	117	திரு. ஆர். துளசிராஜா, ஒன்றிய குழு தலைவர், முகையூர் ஊராட்சி ஒன்றியம், மற்றும் திரு. எ. கிரிதரன், த/பெ. அண்ணாமலை, 13, கர்ணம் தெரு, திருக்கோவிலூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	முகையூர் ஊராட்சி ஒன்றியம், கொடுக்கப்பட்டு வசந்தகிருஷ்ணாபுரம், ஆதிச்சனூர், கோட்டமருதூர் இடையே துறிஞ்சலாற்றின் குறுக்கே பாலம் கட்டக் கோரியது.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கையின்படி இந்த சாலை தல ஆய்வு செய்யப்பட்டது. இந்த சாலையில் மணம்பூண்டி முதல் கொடுக்கப்பட்டு வரை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது (அதாவது ஆறு வரை) ஆற்றின் அந்தப் பக்கம் ஊராட்சி சாலையாகும். மழைக்காலங்களில் வசந்தகிருஷ்ணாபுரம், ஆதிச்சனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6000 பொதுமக்கள் போக்குவரத்து வசதியின்றி அல்லல்படுகின்றனர். வேறு மாற்று வழியும் இல்லை. இந்த இடத்தில் ஆற்றின் அகலம் சுமார் 82 மீட்டர் உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு 2 கோடி ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி இல்லாத காரணத்தினால் நபார்டு பாலங்கள் நிதி பெற்று இப்பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) முகையூர் ஊராட்சி ஒன்றியம், இரு) மணம்பூண்டி அவர்களின் கடித எண். அ5/2425/2011, நாள் : 02–10–2011]*	துறிஞ்சலாற்றின் குறுக்கே, மேம்பாலம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதன் தொடர்ச்சியாக, மேற்படி பாலம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்படும் தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பவும், விழுப்புரம் மாவட்டம் திட்ட அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	118	திரு. ஆர். குரு, த/பெ. ராஜாங்கம், வைத்தியர் தெரு, தேவனூர் & அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	முகையூர் ஊராட்சி ஒன்றியம், தேவனூர் மற்றும் கோட்டமருதூருக்கும் இடையே துறிஞ்சலாற்றின் குறுக்கே பாலம் கட்டக் கோரியது.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் தல ஆய்வு செய்யப்பட்டது. மனுவில் பாலம் கட்ட கோரியுள்ள இடம் தேவனூர், கோட்டமருதூர் சாலையில் உள்ளது. இந்த சாலை விவசாய தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேவனூர் மற்றும் கோட்டமருதூர் கிராம மக்கள் இதனை பயன்படுத்தி வருகின்றனர். மழைக்காலங்களில் ஆற்றில் வெள்ளம் வரும்போது இந்தப் பாதை முழுவதுமாக துண்டிக்கப்பட்டுவிடும். இந்த இடத்தில் ஆற்றின் அகலம் சுமார் 75 மீட்டர் உள்ளது. இங்கு புதிய பாலம் அமைக்க தோராயமாக ரூ. 1.8 கோடி செலவாகும். இதனால் தேவனூர் மற்றும் கோட்டமருதூர் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6500 பொது மக்கள் பயனடைவர். ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லாததால் நபார்டு பாலங்கள் நிதி பெற்று இப்பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), முகையூர் ஊராட்சி ஒன்றியம், (இ) மணம்பூண்டி, அவர்களின் கடித எண். அ5/2425/2011, நாள் : 02–10–2011]

குழுவின் பரிந்துரை.
(6)

தேவனூர் மற்றும் கோட்ட மருதூர் இடையே துறிஞ்சலாற்றின் குறுக்கே, மேம்பாலம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதன் தொடர்ச்சியாக, மேற்படி பாலம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்படும் தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பவும், விழுப்புரம் மாவட்டம் திட்ட அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	120	திரு. தா. துரைக்கண்ணன், த/பெ. தாண்டவராயன், கிராமம் என்கிற கிராமம் & அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம்.	விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கிராம் பொதுப்பணித்துறை ஏரியில் மதகு சீர் செய்து ஏரி தூர்வாரியும், வரத்துக்கால்வாய் செப்பனிடவும் கோரியது.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
திரு. தா. துரைக்கண்ணன், கிராமம் என்கிற கிராம மனுதாருடன் இன்று தல ஆய்வு செய்யப்பட்டதில், ஏரியின் கரை பராமரிப்பு இல்லாமல் மிகவும் மோசமாகவும் மதகு மற்றும் கலிங்கல் உடைந்து பழுதடைந்தும் உள்ளது. இக்கண்மாயினை முழுமையாக பராமரிப்பு வேலை செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இந்த ஏரி மதகு புதியதாக கட்டவும் ஏரிக்கரையை பலப்படுத்தியும், வரத்துக்கால்வாய், உபரிநீர்போக்கி கலுங்கல் சீர் செய்திடவும் 2012–2013–ல் பகுதி II–திட்டத்தின்கீழ் கருத்துரு அனுப்பி ஒப்புதல் பெற்றபின் பணிகள் யாவும் கூடியவிரைவில் முடிக்கப்படும் அல்லது ஏதேனும் சிறப்பு நிதி கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையிலும் செய்து தரப்படும். *[செயற்பொறியாளர், நீ.ஆ.து., கீழ்பெண்ணையாறு வடிநில கோட்டம், விழுப்புரம், அவர்களின் கடித எண். 740எம்./கோ249/2011/ இவ.அ–1/நாள் : 04–11–2011.]*	விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம், கிராமம் பொதுப்பணித்துறை ஏரியில் மதகு சீர் செய்தல், தூர்வாருதல், வரத்துக்கால்வாய் செப்பனிடல் போன்ற பணிகளை செய்திடவும் ஏரியில் ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்றிடவும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணையினை பெற்று மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பராமரிப்புப் பணியினை முன்னுரிமை அடிப்படையில் செய்திட தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறும் அரசச் செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை–9க்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	126	திரு. மு. ஏழுமலை (எ) நியாயக்கர்ணன் கொஞ்சிமங்கலம் கிராமம், கிளியனூர் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	கொஞ்சிமங்கலம் ஊராட்சியில் சுடுகாடு அமைந்துள்ள பகுதியில் ஆக்கிரமிப்பு அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
வானூர் ஊராட்சி ஒன்றியம் கொஞ்சிமங்கலம் ஊராட்சியில் கொஞ்சிமங்கலம் மற்றும் பழைய கொஞ்சிமங்கலம் ஆகிய இரண்டு கிராமத்திலும் உள்ள சுடுகாடு அமைந்துள்ள இடத்தின் பக்கத்தில் உள்ள நிலத்துக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். பழைய கொஞ்சிமங்கலம் RS. No.4/11 பழைய எண். 35 விஸ்தீரணம் 0.99 ஏப்ஸ். புதிய கொஞ்சிமங்கலம் RS.No. 129/4 பழைய எண் 112/1B விஸ்தீரணம் 0.49.5 ஏர்ஸ். மயான புறம்போக்கு என்பதால் வருவாய் துறை மூலம் ஆக்கிரமிப்பு அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் வானூர் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடித எண். எஸ். 2/5087/10, நாள் : 25-05-2011.]*	கொஞ்சிமங்கலம் ஊராட்சியில் சுடுகாடு அமைந்துள்ள பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறும் வட்டார வளர்ச்சி அலுவலர், வானூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
7	130	சிவானந்தம் த/பெ. அப்பாசாமி, சீர்பனந்தல் அஞ்சல், கடம்பூர் வழி, சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். அஞ்சல் எண்–605 802.	சிவபுரம் – சீர்பனந்தல் ஏரிக்கரையின் மேல் செல்லும் சாலையை சீர் செய்வது சம்மந்தமாக

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
சிவபுரம் முதல் சீர்பனந்தல் வரையிலான சாலை பத்து ஆண்டுகளுக்கு முன்பாக கிராம சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத் துறையால் பணி மேற்கொள்ளப்பட்ட சாலையாகும். இச்சாலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி சாலைப் பட்டியலில் இடம்பெறாத வகைப்படுத்தப்படாத சாலையாகும். இச்சாலையின் நீளம் 2 கி.மீ. ஆகும். எடுத்தனூர் நடுநிலைப்பள்ளியில் (சிவபுரம்) இருந்து ஆரம்பித்து சீர்பனந்தல் கிராமத்தை இணைக்கும் சாலையாகும். சிவபுரம் கிராமத்தில் சுமார் 850 மக்கள் மற்றும் சீர்பனந்தல் கிராமத்தில் 1800 மக்களும் வசிக்கிறார்கள். தற்போது இந்த சாலை சிவபுரத்திலிருந்து 0/0– 0/3 தூரத்திற்கு பழுதடைந்த தார் சாலையாகவும் 0/3– 1/7 கி. மீட்டர் வரையில் மிகவும் மோசமாகவும் மீதமுள்ள 1/7–2/0 கி.மீ வரை குடியிருப்புப் பகுதியாகவும் உள்ளது. இச்சாலையை மேம்பாடு செய்து தார்சாலையாக பயன்பாட்டிற்கு கொண்டு வர ரூ. 37.00 லட்சம் நிதி தேவைப்படும். இந்த அளவிற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. எனவே வரும் நிதியாண்டில் இச்சாலையை அரசு திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுத்து மேம்பாடு செய்யலாம். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், ரிஷிவந்தியம் அவர்களின் கடித எண் ந.க. எண். அ3/1321/2011 நாள்: 01–11–2011]*	சிவபுரம்–சீர்பனந்தல் ஏரிக்கரையின் மேல் செல்லும் சாலையை முன்னுரிமை அடிப்படையில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திட்ட அலுவலர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.


வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	131	திரு. வி. ஜெயச்சந்திரன், 1/77, பிள்ளையார் கோவில் தெரு, வி. சாத்தனூர், விழுப்புரம் வட்டம்.	வி. சாத்தனூர் ஏரிக்கரையை அகலப்படுத்தி வி. சாத்தனூர் கிராமத்திலிருந்து முண்டியம்பாக்கம் கிராமத்திற்கு இணைப்பு சாலை அமைத்துத் தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
வி. சாத்தனூர் கிராமத்திலிருந்து முண்டியம்பாக்கம் வரை செல்லும் ஏரி பொதுப்பணித் துறையை சார்ந்ததாகும். எனவே, வி. சாத்தனூர் ஏரிக்கரையை அகலப்படுத்தி சாலை அமைக்க செயற்பொறியாளர் பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரம்) விழுப்புரம் அவர்களிடம் தடையின்மை சான்று வழங்க கோரி இவ்வலுவலக கடிதம் ந.க. அ4/2376/2011 நாள் 03-11-2011 வாயிலாக கோரப்பட்டுள்ளது. தடையில்லா சான்று கிடைக்கப்பெற்றபின், உரிய மதிப்பீடுகள் தயார் செய்து வரும் நிதி ஆண்டில் நபார்டு மற்றும் பாரத் நிர்மான் போன்ற திட்டங்களின் கீழ் இணைப்பு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணைளையர், ஊராட்சி ஒன்றியம், விக்கிரவாண்டி அவர்களின் கடித ந.க. எண். அ4/2376/2011 நாள்: 03-11-2011]*	வி. சாத்தனூர் ஏரிக்கரைப் பகுதியை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை அவர்கள் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தி, அப்பகுதியை அகலப்படுத்தி இணைப்புச் சாலை அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	132	திரு. என். பாலாஜி, தபெ. நல்முனி 61, வடக்கு தெரு, திருக்கோவிலூர்.	திருக்கோவிலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
திருக்கோவிலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக 31–10–2011 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் திருக்கோவிலூர் வட்டாட்சியர், செயல் அலுவலர் திருக்கோவிலூர் பேரூராட்சி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர், மற்றும் வன அலுவலர் வனத்துறை திருக்கோவிலூர் ஆகிய அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் திருக்கோவிலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட தகுதியான நிலம் ஏதுமில்லை என்பதும் நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக எவ்வித முகாந்திரமும் தற்சமயம் பேரூராட்சி நிர்வாகத்தில் இல்லை என்பதும், ஏற்கெனவே பல்வேறு புல எண்களில் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டுள்ளது என்பதும் விவாதிக்கப்பட்டது. மேலும், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான கூடுதல் இடம் (அணுகு பாதை) தானம் பெற்ற பின்னரே புதிய பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமாக உரிய கருத்துரு அனுப்ப இயலும். மேலும் தற்போதுள்ள பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பேரூராட்சி அலுவலகம், சந்தரம் திருமண மண்டபம், வனத்துறை அலுவலகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் பகுதிகளை சேர்த்து தற்போதைய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தலாம் என்பதும், அதற்காக சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறை மற்றும் வனத் துறை அலுவலர்களிடமிருந்து நிலம் உரிமை மாற்றம் தொடர்பாக சம்மதக் கடிதம் பெற்றவுடன் பேரூராட்சி மனறத்தில் பொருள் கொண்டுச் செல்லப்பட்டு, பேரூராட்சி மன்ற தீர்மானம் பெற்று, பேருந்து நிலையம் விரிவுபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஊர் ஆட்சியர், திருக்கோவிலூர் அவர்களின் கடித எண். அ1/5107/10, நாள் : 01–11–2011.]*	திருக்கோவிலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க இடம் தெரிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குழு பரிந்துரைப்பதோடு, பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அரசு செயலாளர், போக்குவரத்து துறை, சென்னை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	135	திரு. டி. கே. அசேன் சரீப்,த/பெ. குடு சரீப், அணைக்கட்டு சாலை, திருவெண்ணைநல்லூர்.	திருவெண்ணைநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைப்பது சம்மந்தமாக.



துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நபார்டு திட்டம் பகுதி–II–ன்படி திருவெண்ணைநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் 595 மீட்டர் அமைப்பது சார்பான கருத்துருக்கள் பள்ளி கல்வி இயக்குனருக்கு 30–07–2011 அன்று பரிந்துரை செய்து பணிந்தனுப்பப்படுகிறது. *[விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித எண். ந.க.எண். 9321/ஆ3/2011, நாள் : 27–07–2011.]*	திருவெண்ணைநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச்சுவர் கட்டும் பணி முடிவுற்றதும் குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர், விழுப்புரம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	138	என். வேம்பு, எம்.ஏ., களவனூர், களமருதூர் அஞ்சல், உளுந்தூர் பேட்டை வட்டம்,விழுப்புரம் மாவட்டம்.	உ. நெமிலி பேருந்து நிறுத்தத்திலிருந்து பாதூர் வரை செல்லும் மண் சாலையை தார் சாலையாக மாற்றி இடையில் சிறுபாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலையை உதவி பொறியாளர், (உ.வ.) மற்றும் உதவி செயற்பெறியாளர், உளுந்தூர்பேட்டை ஆகியோர் நேரில் தல ஆய்வு செய்து அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.	நெமிலி பேருந்து நிறுத்தத்திலிருந்து பாதூர் வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றி இடையில் சிறு பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு அரசுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

[திருநாவலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) அவர்களின் கடித எண். அ2/2119/2011 நாள்: 04-11-2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	140	திரு. ஏ. ஏழுமலைக்கண்ணன், நயினார் தெரு, முட்டத்தூர் & அஞ்சல், விழுப்புரம்.	முட்டத்தூர் கிராமத்திலிருந்து கல்யாணம்பூண்டி கிராமத்திற்கு இணைப்பு சாலை கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
முட்டத்தூரிலிருந்து கல்யாணம்பூண்டிக்கு இணைப்பு சாலை கோரும் சாலையின் நீளம் மொத்தம் 3 கி.மீ. நீளமாகும். இதில் தற்போது 1 கி.மீ. தூரத்திற்கு வண்டி செல்லும் சாலையாக உள்ளன, மீதமுள்ள 2 கி.மீ.தூரம் பாதை புறம்போக்கு மற்றும் கல்லாங்குத்து புறம்போக்கு ஆகும். இந்த 2 கி.மீ. தூரத்தில் உள்ள இடத்தை அப்பகுதியில் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் சுமார் 10 வருடங்களுக்குமுன் தாங்களாகவே ஆக்கிரமிப்பு செய்து விவசாய நிலமாக பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, கல்லாங்குத்து புறம்போக்கு மற்றும் பாதை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய் வட்டாட்சியர் விழுப்புரம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் முட்டத்தூர் ஆகியோருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.அ4/2376/2011 நாள் 3-11-2011 வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருவாய் வட்டாட்சியர் விழுப்புரம் மற்றும் முட்டத்தூர் ஊராட்சி மன்ற தலைவரால் ஆக்கிரமிப்புகளை அகற்றியபின் மனுதாரர் கோரியுள்ள இணைப்பு சாலை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் கடித எண். ந.க.அ4/2376/2011, நாள் : 3-11-2011.]*	முட்டத்தூர் கிராமத்திலிருந்து கல்யாணம்பூண்டி கிராமத்திற்கு செல்லும் இணைப்புச் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அச்சாலையை ஆறு மாத காலத்திற்குள் அமைக்க தொடர் நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
13	141	திரு. கே. பரமேஸ்வரன், பொதுமக்கள் சார்பாக, பாக்கம் அஞ்சல், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம்.	பாக்கம் கிராமத்தில் மரகதாம்பாள் பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான தரிசு நிலத்தில் பாக்கம் துணை மின்நிலையம் அமைப்பது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
பாக்கம் கிராமத்தில் சர்வே எண்.284–ல், 3 ஏக்கர் 40 சென்ட் அருள்மிகு மரகதம்பாள் பிரகதீஸ்வர் ஆலயத்திற்கு சொந்தமான நிலத்தில் துணை மின் நிலையம் அமைக்க தடையில்லா சான்று கோரி இணை ஆணையர்/இந்துசமய அறநிலையத்துறை/விழுப்புரம் அவர்களிடம் கோரப்பட்டதில் மேற்படி நிலம் விற்பனை செய்ய இயலாது என 22.01.2009 கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. *[மேற்பார்வைப் பொறியாளர் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம் அவர்களின் கடித எண் 1128, நாள் : 18–8–2011.]*	பாக்கம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க ஏதுவாக வருவாய் கோட்ட அலுவலர் வாயிலாக வேறு இடம் தேர்வு செய்து, அவ்விடத்தை மின்சார வாரியத்திற்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	143	திரு. பி. கொடியான், ஒன்றிய தலைவர் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் 3/17, சமீர் காம்ப்ளக்ஸ் மாடி, விருத்தாசலம் சாலை, உளுந்தூர்பேட்டை.	உளுந்தூர்பேட்டை–கிளியூர் வரை பள்ளி மாணவர்களுக்காக கூடுதல் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
தற்சமயம் உளுந்தூர்பேட்டை கிளையிலிருந்து இரு நகரப் பேருந்துகள் மூலம் உளுந்தூர்பேட்டை–நத்தாமூர் இடையே கிளியூர் வழியாக 14 நடைகளும் திருக்கோயிலூர் கிளையிலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலம் திருக்கோயிலூர்– தாமல் இடையே நத்தாமூர் கிளியூர் வழியாக 12 நடைகளும், இதை தவிர இரு புறநகர் பேருந்துகள் மூலம் உளுந்தூர்பேட்டை – திருக்கோயிலூர் இடையே நத்தாமூர், கிளியூர் வழியாக 10 நடைகளும் இக்கிராமம் வழியாக பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதிகளே இக்கிராமத்திற்கு போதுமானதாக உள்ளது. மேலும் இவ்வழித்தடப் பகுதி கிராம மக்கள், பள்ளி மாணவர்கள் பாதுகாப்பான பயணம் தொடர அவ்வழித்தடத்தில் இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்துகளின் சீரான இடைவெளி அமைத்து காலஅட்டவணை மாற்றம் செய்யப்பட்டு 03.04.2011 முதல் நடைமுறை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை. இருப்பினும் இவ்வழித்தடத்தில் உளுந்தூர்பேட்டையில் இருந்து பாண்டூர், களமருதூர், பிள்ளைமார்குப்பம் வரை கிராம பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாலை நேரத்தில் கூடுதலாக 2 நடைகள் 19.09.2011 முதல் பேருந்து வசதி அளிக்கப்பட்டுவருகிறது. *[மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் அவர்களின் கடித எண். 190/போவ6/தநாஅபோக(வி)/ 2011, நாள் : 18–08–2011.]*	உளுந்தூர்பேட்டை–கிளியூர் வரை பள்ளி மாணவர்களுக்காக பள்ளி நேரத்தில் போதிய பேருந்துகளை, ஒரு வார காலத்திற்குள் இயக்க நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்புமாறும் பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	144	திரு. R.G. சரவணன் மாவட்ட அமைப்பாளர், மனித உரிமைகள் கழகம், அனந்தபுரம்–605 201, விழுப்புரம் மாவட்டம்.	அனந்தபுரம் பேருராட்சியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவ மனையாக தரம் உயர்த்த வேண்டுதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
அனந்தபுரம் பேருராட்சியில் தற்போது இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர பிரசவ வசதி செய்யப்பட்டு சுழற்சி முறையில் செவிலியர் பணியில் உள்ளனர் இரண்டு மருத்துவ அலுவலர்கள் தற்போது நாளொன்றுக்கு சுமார் 180 புறநோயாளிகள் மருத்துவ வசதி பெற்று வருகின்றனர். மேலும் அனந்தபுரத்திலிருந்து 15 கீ.மீ. தொலையில் செஞ்சி அரசு மருத்துவமனையும் 22 கீ.மீ. தொலைவில் இதே வட்டாரத்தில் சத்தியமங்களத்தில் மேம்படுத்தப்பட்ட 30 படுக்கை கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.	அனந்தபுரம் பேரூராட்சியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர மருத்துவனையாக தரம் உயர்த்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் விழுப்புரம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

[விழுப்புரம், துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களின் கடித எண் இல்லை நாள் : 4–11–11.]

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
16	146	திரு. பி.எஸ். இராமலிங்கதுரை செயலர், கல்வராயன்மலை கிளை, தமிழ்நாடு ஷெட்யூல்டு டிரைப்ஸ் (மலையாளி) பேரவை, பொட்டியம் 606 207, விழுப்புரம் மாவட்டம்.	கச்சிராபாளையம் – பொட்டியம் இடையே சாலை வசதி மேம்படுத்துதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
கச்சிராப்பாளையம் – பொட்டியம் கிராமத்திற்கு செல்லும் சாலை 18 அடி அகலத்தில் ஏற்கெனவே 8கி.மீ நீலத்திற்கு தார் சாலையாக மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இவ்விரு கிராமத்திற்கு இடையில், செல்லும் பாதையை நெடுஞ்சாலைத் துறை போக்குவரத்து கணக்கீட்டின் அடிப்படையில் அமுல்படுத்த முன்மொழிந்து அரசு முடிவெடுக்கும்பட்சத்தில், வனத்துறை விதிகளுக்குட்பட்டு, வனநிலம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும். அதில் அக்ராப்பாளையம் – கும்பக்கொட்டாய் வரையுள்ள சாலைப்பகுதி தகரை காப்புக்காடு வழியாக 4 கி.மீ செல்கிறது. *[மாவட்ட வன அலுவலர், கள்ளக்குறிச்சி ந.க.எண்.4000/2011/வ, நாள் : 12–08–2011.]*	கச்சிராபாளையம்–பொட்டியம் இடையே உள்ள சாலையை மேம்பாடு செய்ய குழு பரிந்துரைக்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	147	திரு. மாரி த/பெ. வெ. பொன்னுசாமி பழங்குடி இருளர் குடியிருப்பு ப.ம. மேட்டுப்பாளையம், உமையாள்புரம், அனந்தபுரம் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் 605 201.	2½ வருடங்களாக குடிநீர் இன்றி தவிக்கும் பழங்குடி இருளர் மக்களுக்கு குடிநீர் வழங்க(அ) வசதி செய்து தர வேண்டுதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
காணை ஊராட்சி ஒன்றியம் பனமலை ஊராட்சிக்குட்பட்ட பனமலை மேட்டுபாளையம், உமையாள்புரம் கிராமத்தில் இருளர் குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் சரிவர வழங்க வில்லை என சட்டமன்ற பேரவை மனு பிரிவில் வரப்பெற்ற புகார் தொடர்பாக மேற்படி பகுதியில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி உள்ளது அதன் மூலம் மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது இந்நிலையில் செஞ்சி பேரூராட்சிக்கு தனியாக செஞ்சி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் புதிய பைப் லைன் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. அதுசமயம், மேற்படி உமையாள்புரம் கிராமத்தின் இருளர் குடியிருப்பு பகுதியின் வழியாக செல்வதால் கூட்டு குடிநீர் திட்ட பைப்லைன் புதியதாக போடுவதற்கு பள்ளம் எடுக்கும் போது அப்பகுதியில் உள்ள உமையாள்புரம் தெருக்குழாய் பைப்லைன் சேதமைந்து விட்டது அதனால் மேற்படி பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. ஊராட்சியினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) மற்றும் நிர்வாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஒப்பந்ததாரர் ஊராட்சி மன்ற தலைவர் இவர்களுடன் நேரடி ஆய்வுகள் மற்றும் விசாரணையின்போது செஞ்சி கூட்டு குடிநீர் திட்டத்தின் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம்	உமையாள்புரம் இருளர் குடியுருப்புப்பகுதியில், திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, பழுதடைந்த பைப் லைனுக்கு பதிலாக புதிய குழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை மனுக்கள் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை—தொடர்ச்சி
(5)

பழுதடைந்த பைப்லைன் இணைப்புகள் உடனடியாக அமைக்கவும் பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கவும் ஊராட்சி மன்ற தலைவருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேற்கண்ட பகுதிகளில் சிறுமின் விசைப்பம்பு ஒன்று உள்ளது. அது நல்ல முறையில் இயங்குகிறது. மேலும் மேற்படி பகுதிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு திறந்தவெளி கிணற்றில் இருந்து நேரடியாக மெயின் பைப்பிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) ஊராட்சி ஒன்றியம், காணை அவர்களின் கடித எண் வட்டார ஊராட்சி (கி.ஊ) காணை ந.க.எண் பி2/1594/11 நாள் : 21–09–2011.]

வரிசை எண்.	*மனு எண்.*	*மனுதாரரின் பெயரும் முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
18	153	திரு. சிவானந்தம், த/பெ. அப்பாசாமி, சீர்பனந்தல் அஞ்சல், கடம்பூர் வழி, சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். அஞ்சல் எண் 605 802.	கரையாம்பாளையம், அருந்தங்குடி சாலையோடு இணையும் இந்த சாலையை சரளை கற்கள் போட்டு தார்சாலையாக மாற்றுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை.
(5)

ஒடியந்தல்–கள்ளிப்பாடி செல்லும் சாலையில் கரையாம்பாளையம் முதல் அருந்தங்குடி வரையில் சாலையை அமைத்திட மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள சாலை 3 கி.மீட்டர் வரை தூரம் உள்ளதாகும். இச்சாலையின் முதல் 1,400 கி மீட்டரும் கடைசி 600 மீட்டரும் மண் சாலையாக உள்ளது. இடைப்பட்ட பகுதியில் 1,000 மீட்டர் வரை சாலையே இல்லாமல் விளை நிலங்களாகவும் சிறுபனையூர் பொதுப்பணித் துறை ஏரியை ஒட்டினார்போலும் உள்ளது.

குழுவின் பரிந்துரை.
(6)

கரையாம்பாளையம் முதல் அருந்தங்குடி வரையில் சாலையை தார் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

எனவே இடைப்பட்ட 1,000 மீட்டர் தூரத்தை புதியதாக சாலை அமைக்க வேண்டியுள்ளது. முதல் கட்டமாக இந்த 1,000 மீட்டர் தூரத்தை வரும் நிதியாண்டில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் புதிய சாலை அமைக்கும் திட்டத்தில் எடுத்துச் செய்யப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) ஊராட்சி ஒன்றியம், ரிஷிவந்தியம் அவர்களின் கடித எண் ந.க.எண் அ3/1321/2011, நாள் : 1–11–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	155	திரு. பொன்னையன், த/பெ. காத்தவராயன், கக்கனூர்.	மயானத்தை அளந்து, மயானம் விரிவுபடுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக புலத்தணிக்கை செய்யப்பட்டு மனுதாரர் முன்னிலையில் மயானம் அளந்து அத்து காண்பிக்கப்பட்டது. ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என மனுதாரருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

(மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விழுப்புரம் அவர்களின் கடித எண் ந.க.எம் 10/21150/2011, நாள் : 2–9–2011.)

குழுவின் பரிந்துரை.
(6)

கக்கனூர் கிராமத்தில், அளந்து அத்து காண்பிக்கப்பட்ட மயானத்தில் கல் நட்டு, குழுவிற்கு அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விழுப்புரம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
20	156	திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி, தலைவர், ஏரி நீரினை பயன்படுத்துவோர் சங்கம், ஆனத்தூர் அஞ்சல், வல்லம் ஒன்றியம், செஞ்சி வட்டம்.	செஞ்சி வட்டம் வராக நரி செவலபுரை கிராமத்தில் தடுப்பு அணை சீர் செய்வது தொடர்பாக

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
செவலபுரை அணைக்கட்டு கால்வாயிலிருந்து கடலி கிராமதின் வழியாக செல்லும் 400 மீ கால்வாய் பணி சிப்பம் எண் 4–ல் செய்யப்பட்டுள்ளது. தற்போது சிப்பம் எண் 4(a)–ல் இதற்காக மதிப்பீட்டில் வழிவகை செய்யபடவில்லை. ஷட்டர் பொருத்தும் பணி மதிப்பீட்டில் வழிவகை செய்ப்பட்டுள்ளது. ஷட்டர் பொறுத்த ஒப்பந்தகாரருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. *[செயற்பொறியாளர், பொதுநீர்ஆ.அ., (கூ./பொ), சிறப்பு திட்ட கோட்டம், (நீர்வள நிலவள திட்டம்), திருவண்ணாமலை, அவர்களின் கடித எண் 57M/2011/இ.நி.வ.அ, நாள் : 12–8–2011.]*	செஞ்சி வட்டம், வராக நதி செவல்புரை கிராமத்தில் தடுப்பு அணை சீர் செய்வது தொடர்பான இம்மனு 10–11–2011 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி அணையை தூர்வாரி அதன் அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித் துறை, சிறப்பு திட்டக்கோட்டம், திருவண்ணாமலை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	161	திரு வி.ஆர். தங்காசன், செயலர், கள்ளக்குறிச்சி பொதுநல சங்கம், கள்ளக்குறிச்சி.	கள்ளக்குறிச்சி புறவழிச்சாலையை பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
சென்னை உயர்நீதிமன்ற வழக்கு மனு எண். 9845/09ல் 21196/09–ன்படி தடையாணை இருந்தமையால், உரிய நேரத்தில் கள்ளக்குறிச்சி பைபாஸ் சாலை அமைக்கும் பணி முடிக்க இயலவில்லை. 12–08–11 அன்று மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால், பிரச்சனைக்குரிய இடங்களை தேசிய நெடுஞ்சாலை துறையினரிடம் ஒப்படைத்திட சேலம் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்புக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடங்களை தேசிய நெடுஞ்சாலை துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டவுடன் கள்ளக்குறிச்சி புறவழிச்சாலை அமைக்கும் பணி முடிக்கப்படும் என தேசிய நெடுஞ்சாலை துறையினர் தெரிவித்துள்ளனர். *[இந்திய தேசிய நெடுஞ்சாலைத்துறை சேலம் திட்ட இயக்குநர் அவர்களின் கடித எண். NHAI/PD/NH–680–Rep./2011/1073, நாள் : 20–08–2011.]*	கள்ளக்குறிச்சி புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு, வருவாய் கோட்ட அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இணைந்து ஒரு மாத காலத்திற்குள் இப்பணியினை நிறைவேற்றிட குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	162	அனைத்து வியாபாரிகள் சங்கம் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் (பிடாகம்) எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை.	ஊராட்சி ஒன்றிய பிடாகம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
எலவனாசூர் கோட்டைப் பிரிவிற்கு உட்பட்ட பிடாகம் பகுதிக்கு 110/22 கே.வி. தியாகதுருவம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது இப்பகுதி துணை மின் நிலையத்திலிருந்து வரும் மின் வழித்தடத்தில் கடைசியாக இருப்பதால், இடைப்பட்ட பகுதியில் ஏதேனும் மின் தடை ஏற்பட்டால் மின் நிறுத்தம் ஏற்படுகிறது. ஆகையால் எலவனாசூர் கோட்டைப் பிரிவிற்கு உட்பட்ட எல்லையில் துணை மின் நிலையம் அமைக்க செம்பியன்மாதேவி கிராமத்தில் அரசு கோழிப்பண்ணை அமைந்துள்ள சர்வே எண் 115/1ல் 2 ஹெக்டேர் 43 ஏர்ஸ் நிலம் கண்டறியப்பட்டு உரிய இசைவினை பெற உதவி இயக்குநர் கால்நடைப் பராமரிப்புத் துறை விழுப்புரம் அவர்களுக்கு கடிதம் 16-11-2011 ல் அனுப்பப்பட்டுள்ளது. உரிய இசைவு கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் நிலம் கையகப்படுத்தப்பட்டு வாரிய விதிமுறைப்படி உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும். இருப்பினும் மேற்படி பீடரில் பராமரிப்பு பணிகள் துரித நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்டு மின்தடை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.	பிடாகம் கிராமத்திற்கு துணை மின் நிலையம் அமைக்க தேவையான இடத்தை கால்நடைப் பராமரிப்புத் துறையிடமிருந்து பெற்று மின்சாரவாரியத்திற்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

[மேற்பார்வைப் பொறியாளர் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் தமிழ்நாடு மின்சார வாரிய விழுப்புரம் அவர்களின் கடித எண். 1130 நாள் : 18-8-2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	171	வீ. மணி எழிலன், செயலாளர், நகர நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், தியாகதுருகம்.	நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பு அகற்றக் கோருதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையானது உளுந்தூர்பேட்டை–கள்ளக்குறிச்சி–சேலம் தேசிய நெடுஞ்சாலையாகும். இச்சாலை தற்பொழுது திட்ட இயக்குநர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகம், சேலம் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு வழிப்பாதை செயலாக்கம் செய்யப்பட்டு (NHAI) வருகின்றது. மேலும் இச்சாலை தற்பொழுது நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லை என கள்ளக்குறிச்சி கோட்டப்பொறியாளர் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு பகுதி தியாகதுருகம் வழியாக செல்லும் சாலையின் இருபுறமும் உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அறிவுரைப்படி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு உரிய கால அவகாசம் வழங்கி விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அவர்களின் கடித எண். ந.க.அ4/6527/2011, நாள் : 03–11–2011.]*	தியாகதுருகம் வழியாக செல்லும் சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அது தொடர்பான அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
24	200	திரு கா. மணி, ஊராட்சி மன்றத்தலைவர், சிவத்தூர் (அஞ்சல்) கள்ளக்குறிச்சி (வட்டம்) விழுப்புரம் (மாவட்டம்)	சிறுவத்தூர் கிராமம் – சமுதாயநல கூடம் கட்டி தர கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
சிறுவத்தூர் கிராமத்தில் ஏற்கெனவே சமுதாயநலக் கூடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. *[கள்ளக்குறிச்சி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித எண். அ2/2224/11, நாள் 04–11–2011.]*	கள்ளக்குறிச்சி வட்டம், சிறுவத்தூர் கிராமத்தில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்வதாக குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதால், அந்நிதியினை உரிய முறையில் பெற்று, மேற்படி சமுதாயக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு விழுப்புரம் மாவட்டம், திட்ட அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	2718	மு. சடையப்பிள்ளை, த/பெ. முருகப்பிள்ளை, அரசம்பட்டு கிராமம், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–606 401	சங்கராபுரம் ஒன்றியம் அரசம்பட்டு கிராமத்தில் செல்லும் வழியில் மணிமுக்தா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலம் கட்ட கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மேற்குறிப்பிட்டுள்ள பாலம் அரசம்பட்டு–பாவளம் சாலை என்ற சங்காராபுரம் ஊராட்சி ஒன்றிய சாலையில் 0/8–ல் மணி நதியின் குறுக்கே 100 பாலங்கள் திட்டம் (5054 JI Panchayat union Areas)-100Bridge மூலம் 13.20 இலட்சம் நிதியில் (CR. No.1/91–92) பாலம் கட்டும் வேலைகள் நடைபெறுக் கொண்டிருந்தபோது 17–11–1992–ல் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பாலம் அடித்துச் செல்லப்பட்டதால் பணிகள் நிறுத்தப்பட்டு கைவிடுதல் கருத்துரு (Write off Proposal) அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் அரசுக்கு மீண்டும் கைவிடுதல் கருத்துரு (Write off Proposal) சமர்ப்பிக்கும் பொருட்டு இவ்வலுவலக கடிதம் 2497/2010/அ3 நாள் 29–07–2011 மூலமாக மாவட்ட ஆட்சியர், விழுப்பரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இந்த இடத்தில் பாலம் கட்டுவதற்கான கருத்துரு கடலூர் நெடுஞ்சாலை, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டம் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. *[கோட்டப் பொறியாளர்(நெ), க(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். 2267/2011/இவ.அ(3), நாள் 02–11–2011].*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலத்தை கட்டுவதற்கு கோட்டப் பொறியாளர் (நெ) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் இணைந்து ஆய்வு செய்து, திட்ட அலுவலருடன் கலந்தாலோசித்து ஆய்வு அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுச் செயலாளர், நெடுஞ்சாலைத்துறைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோட்டப் பொறியாளர் (நெ) கள்ளக்குறிச்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	2719	திரு. மு. சடையப்பிள்ளை, த/பெ. முருகப்பிள்ளை, அரசம்பட்டு கிராமம், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	அரசம்பட்டு கிராமத்திற்கு புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
அரசம்பட்டு கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அதற்குண்டான கருத்துருக்கள் அனைத்தும் இவ்வலுவலக கடித ந.க.எண்.3956/அ5/10, 23-06-2011 நாளிட்ட கடிதத்தின்படி இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. *[துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். ந.க.எண்.3956/அ5/2010 நாள் : 02-11-2011.]*	அரசம்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், கள்ளக்குறிச்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
27	2720	திரு. எஸ்.கண்ணன், முன்னாள் பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர், கொசப்பாடி அஞ்சல், சங்கராபுரம்.	கொசப்பாடி ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்டித்தருமாறு கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை) எண்.312 நாள் 22–10–2010–ன் படி சங்கராபுரம் வட்டம், புதுப்பாலப்பட்டு கிராமம் மணி நதியின் குறுக்கே அணைக்கட்டு கட்டி கொசப்பாடி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பணியில், ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுமான பணிகள் மார்ச் 2011ல் முடிவுற்றது. இந்த அணைக்கட்டிலிருந்து கொசப்பாடி ஏரிக்கு நீர் செல்லும் வாய்க்கால் வெட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இதற்கான கருத்துரு செயற்பொறியாளர், பொ.ப.து, வெள்ளாறு வடிநில கோட்டம், விருத்தாசலம் அவர்களின் மூலம் மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 4–11–2011 அன்று வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்களின் கூட்டு தலஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நிலம் கையகப்படுத்தி பொதுப்பணித்துறையிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடித்து தரப்படவுள்ளது. *[உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். கோ. 2சி/2011/உ.செ.பொ./க.கு/ நாள்: 4–11–2011.]*	கொசப்பாடி ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்டுவதற்கேற்ப நிலத்தைக் கையகப்படுத்தவும் அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்புமாறும் உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
28	2721	திரு. மு.சடையப்பிள்ளை, த/பெ.முருகப்பிள்ளை, அரசம்பட்டு கிராமம், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–606 401.	விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியம், அரசம்பட்டு எட்டியவாறு வடபாலப்பட்டு இணைப்பு சாலை கோருவது சம்மந்தமாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மனுதாரரால் கோரப்பட்டுள்ள அரசம்பட்டு எட்டியவாறு வடபாலப்பட்டுக்கு இடையே இணைப்பு சாலை அமைப்பது இத்துறை சார்ந்தது அல்ல. சங்கராபுரம், ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். எனவே மேற்படி இணைப்பு சாலை அமைப்பதை சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக மேற்கொள்ளலாம். *[கோட்டப் பொறியாளர்(நெ), க(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். 2268/2011/இவஅ(3) நாள் : 02–11–2011.]*	சங்கராபுரம் ஒன்றியம், அரசம்பட்டு எட்டியவாறு வடபாலப்பட்டுக்கு இடையே இணைப்பு சாலை தேவையினை ஆய்வு செய்து தேவையிருப்பின், பணியினை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க திட்ட அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	2723	திரு. ந. இராஜேந்திரன், த/பெ. நல்லசேவி, கொங்கராயபாளையம், கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்–606 203.	கள்ளக்குறிச்சி–கூத்தக்குடி செல்லும் சாலையில் 20–வது கிலோ மீட்டரில் கொங்கராயபாளையம் பிரிந்து செல்லும் வழியில் மணிமுத்தாறு நதி மீதி மேம்பாலம் அமைத்துத் தர கோருதல்

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
கொங்கராயபாளையம் செல்லும் வழியில் மணிமுத்தாறு நதியின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர கோரியுள்ள சாலையானது இக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள கொங்கராயபாளையம் கி.மீ.0/0–1/8 என்கிற மாவட்ட இதர சாலையில் கி.மீ.0/8–ல் மணிமுத்தாறு நதி குறுக்கிடும் இடமாகும். மேற்படி இடத்தில் நபார்டு வங்கி நிதி உதவியின் மூலமாக மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.450.00 இலட்சம் கோரி கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. [கோட்டப் பொறியாளர்(நெ),க(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். 2268–2/இவ.அ(3) நாள் : 03–11–2011].	கொங்கராபாளையம் செல்லும் வழியில் மணிமுத்தாறு நதியின் குறுக்கே மேம்பாலம் அமைக்க தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய அரசுச் செயலாளர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–9 அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	2725	திரு. சின்னசாமி, த/பெ. பாவாடை, கூத்தக்குடி ஆசனூர் வழி, கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்–606 305.	தியாக துருவம் ஒன்றியம் கள்ளக்குறிச்சி–கூத்தக்குடி செல்லும் சாலையில் கூத்தக்குடியிலிருந்து நினையூருக்கு சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 பிரிவு 2கீழ் பிரேரணையினை துறை மூலம் சமர்ப்பிக்கும். *[மாவட்ட வன அலுவலர்(கூ.பொ.) விழுப்புரம் கோட்டம் விழுப்புரம் அவர்களின் கடித எண்.ந.க.எண்.7689/2011/எம் நாள் : 05–11–2011.]*	கூத்தக்குடியிலிருந்து நினையூருக்குச் செல்ல சாலை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் சென்னையிலுள்ள, முதன்மை வன பாதுகாப்பு அதிகாரியின் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு விழுப்புரம் கோட்டம், மாவட்ட வன அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
31	2727	திரு. ஜெ.பி.ராஜி (எ) கோபு, த/பெ. ஜெயப்பிரகாஷ், நகரப் பொதுமக்கள் சார்பாக கள்ளக்குறிச்சி நகராட்சி, விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி நகராட்சி க.மாமனந்தல் சாலையில் குடிநீர் கிணறு அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2001-ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 36793 ஆகும். மேற்படி மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் 6 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. மற்றும் நகர் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து சிறு மின் விசைப்பம்புகள் பொருத்தி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 51854 ஆகும். தற்சமயம் குடிநீர் பற்றாக்குறையினை நீக்க அரசு மூலம் கன்சல்டன்சி அமைக்கப்பட்டு நகராட்சி முழுவதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கந்தரேசபுரத்திலிருந்து கள்ளக்குறிச்சி வரை மின்சாரத்திற்காக தனியாக பீடர் லைன் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் குடிநீருக்கு தேவையான மின்சாரம் சரிவர கிடைப்பதில்லை. நகருக்கு சரியான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. ஆகையால் மனுதாரர் கோரியுள்ள இடத்தில் போதுமான இடம் தேர்வு செய்து மனுதாரர் கோரிக்கையினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயல் அலுவலர்(பொ) கள்ளக்குறிச்சி நகராட்சி அவர்களின் கடித எண் ந.க.எண்.அ1/1507/2011 நாள் : 03-11-2011.]*	கள்ளக்குறிச்சி நகராட்சி க.மாமனந்தல் சாலையில் குடிநீர் கிணறு அமைக்க இருக்கும் இடத்தை, மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு மின்சார வாரிய மேற்பார்வைப் பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மேற்பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
32	2728	திரு. ஆர்.குமரேசன், தபெ. ராதா, அண்ணாநகர் நகரப் பொதுமக்கள் சார்பாக, கள்ளக்குறிச்சி நகராட்சி, விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி நகராட்சி ஏமப்பேர் குடிநீர் கிணறு அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2001–ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 36793 ஆகும். மேற்படி மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் 6 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. மற்றும் நகர் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து சிறு மின் விசைப்பம்புகள் பொருத்தி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 51854 ஆகும். தற்சமயம் குடிநீர் பற்றாக்குறையினை நீக்க அரசு மூலம் கன்சல்டன்சி அமைக்கப்பட்டு நகராட்சி முழுவதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுந்தரேசபுரத்திலிருந்து கள்ளக்குறிச்சி வரை மின்சாரத்திற்காக தனியாக பீடர் லைன் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் குடிநீருக்கு தேவையான மின்சாரம் சரிவர கிடைப்பதில்லை. நகருக்கு சரியான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. ஆகையால் மனுதாரர் கோரியுள்ள இடத்தில் போதுமான இடம் தேர்வு செய்து மனுதாரர் கோரியுள்ள கோரிக்கையினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயல் அலுவலர்(பொ) கள்ளக்குறிச்சி நகராட்சி அவர்களின் கடித எண்.ந.க.எண்.அ1/1508/2011 நாள் : 03–11–2011.]*	கள்ளக்குறிச்சி நகராட்சி ஏமப்பேரில் குடிநீர் கிணறு அமைக்கும் பணி தொடர்பாக கள்ளக்குறிச்சி நகராட்சியின் செயல் அலுவலர், மின்சார வாரியத்தைச் சார்ந்த தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் ஆலோசனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அது குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
33	2730	திருமதி ராணி, கபெ.எம்.ஜி. கிராம பொதுமக்கள் சார்பாக, 1. மூரார்பாளையம் 2. கல்லோரிக்குப்பம், ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி.	கள்ளக்குறிச்சி ஒன்றியம் மூரார்பாளையத்திலிருந்து கல்லோரிக்குப்பம் செல்லும் சாலையிலுள்ள தரைபாலத்தை சீர் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
1. பரமனத்தம்–பிச்சநத்தம் சாலை கடைசியில் (மூரார்பாளையம்–கல்லோரிக்குப்பம் சாலை) 100 மீட்டர் பெரிய ஓடை உள்ளது. இந்த ஓடையில் மழை காலத்தில் மட்டும் தண்ணீர்வரத்து அதிகமாக இருக்கும். ஆகவே இந்த ஓடையில் தரைபாலம் அவசியம் கட்டப்பட வேண்டும். தரைபாலம் மற்றும் அணுகுசாலை அமைப்பதற்கு மொத்தமாக ரூ.1.50 லட்சம் மதிப்பீடாகும். எனவே இதை பொதுப்பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கலாம். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்.அ2/2224/11, நாள் : 04–11–2011.]*	மனுதாரர் கோரியுள்ள தரைப்பாலத்தை அமைக்கத் தேவையான நிதி கிடைக்கப் பெற்றவுடன் இப்பணியினை முடிக்க திட்ட அலுவலர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
34	2731	திரு. எம்.செந்தில்குமார், த/பெ.மாரிமுத்து, எண்.136டி, க.மாமனந்தல் சாலை, நகரப் பொதுமக்கள் சார்பாக, கள்ளக்குறிச்சி நகராட்சி, விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி நகராட்சி பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யக் கோருதல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
கள்ளக்குறிச்சி நகராட்சி பேருந்து நிலையம் 1983 ஆம் வருடம் கட்டப்பட்டது. மேற்படி பேருந்து நிலையம் அன்றைய மக்கள் தொகை மற்றும் நகருக்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டது. பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்ய ஏற்கெனவே செயல்பட்டு வந்த நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்புறத்தில் காலியாக உள்ள இடத்தினை விரிவாக்கம் செய்ய வரைபடம் தயார் செய்து நகர் ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்காணும் வரைபடத்தில் சில குறைபாடுகளை சரிசெய்து மீள சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. உள்ளாட்சித் தேர்தல் 2011 நடைபெற்று முடிவற்றதால், இப்பணியினை தொடர முடியவில்லை. தற்போது மீண்டும் திருத்திய வரைபடம் தயார் செய்து சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட நிர்வாகத்திடம் புதிய பேருந்து நிலையம் அமைக்க தேசிய நெடுஞ்சாலை அருகில் சர்வே எண்.228/2, 164-ல் உள்ள காலி இடத்தில் சுமார் 7 ஏக்கர் தேர்வு செய்து வழங்கினால் புதிய பேருந்து நிலையம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயல் அலுவலர் (பொ) கள்ளக்குறிச்சி நகராட்சி அவர்களின் கடித எண்.ந.க.எண்.அ1/1509/2011 நாள் : 03-11-2011.]*	கள்ளக்குறிச்சி நகராட்சி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
35	2732	ஆர்.துளசிராஜா, ஒன்றிய குழு தலைவர், முகையூர் ஊராட்சி ஒன்றியம்.	முகையூர் ஊராட்சி ஒன்றியம், கொடுக்கப்பட்டு, வசந்தகிருஷ்ணாபுரம், ஆதிச்சனூர், கோட்டமருதூர் இடையே துறிஞ்சலாற்றின் குறுக்கே பாலம் கட்டக் கோரியது தொடர்பாக.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கையின்படி இந்த சாலை தல ஆய்வு செய்யப்பட்டது. இந்த சாலையில் மணம்பூண்டி முதல் கொடுக்கப்பட்டு வரை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது (அதாவது ஆறு வரை) ஆற்றின் அந்த பக்கம் ஊராட்சி சாலையாகும். மழைக்காலங்களில் வசந்தகிருஷ்ணாபுரம், ஆதிச்சனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6000 பொதுமக்கள் போக்குவரத்து வசதியின்றி அல்லல் படுகின்றனர். வேறு மாற்று வழியும் இல்லை. இந்த இடத்தில் ஆற்றின் அகலம் சுமார் 82 மீட்டர் உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு 2 கோடி ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி இல்லாத காரணத்தினால் சிறப்பு நிதி பெற்று இப்பணியினை முடிக்கலாம்.

[வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), முகையூர் ஊராட்சி ஒன்றியம்,(பூ) மணம்பூண்டி அவர்களின் கடித எண்.அ5/2425/2011, நாள் : 02-10-2011.]

குழுவின் பரிந்துரை.
(6)

வசந்தகிருஷ்ணாபுரம், ஆதிச்சனூர் கோட்ட மருதூர் இடையே துறிஞ்சலாற்றின் குறுக்கே, மேம்பாலம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதன் தொடர்ச்சியாக, மேற்படி பாலம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்படும் தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பவும், விழுப்புரம் மாவட்டம் திட்ட அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	114	திரு. N. வேம்பு, எம்.ஏ., களவனூர், களமருதூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம் தெற்கு.	களவனூரில் உள்ள சேஷ நதியின் குறுக்கே நீர் தேக்க அணை கட்டவேண்டி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்காணும் இடத்தில் அணைகட்டும் பணிக்கான மதிப்பீடு உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், விழுப்புரம் அவர்களால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட உடன் மேற்படி அணைக்கட்டும் பணி துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. *[உதவிச் செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் க.எண்.கோ.2சி/2011/உ..செ.பொ./க.கு/நாள் : 05–09–2011.]*	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	115	திரு. சி.டி.பாலுமுருகன், த/பெ.துரைசாமி உடையார், திருக்கோவிலூர் மெயின் ரோடு, சின்னசெவலை, திருக்கோவிலூர் வட்டம்.	மலட்டாற்றின் குறுக்கே பாலம் அமைப்பது சம்மந்தமாக.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்காண் மனுவில் குறிப்பிட்டுள்ள பாலம் இக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள விருத்தாசலம்–உளுந்தூர்பேட்டை–விழுப்புரம் நெடுஞ்சாலையில் கி.மீ.43/10 மலட்டாறு குறுக்கிடும் இடமாகும். இந்த இடத்தில் சி.ஆர்.ஐ.டி.பி 2011–12 திட்டத்தில் பாலத்தின் ஒடுதளத்தை சீர் செய்யவும், தடுப்பு சுவர் கட்டவும், கருத்துருக்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு 24–11–2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளது. *[கோட்டப் பொறியாளர்(நெ), கு(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்.1790/2011/இவ.அ/நாள் 04–11–2011.]*	மனுதாரரின் கோரிக்கை தொடர் நடவடிக்கையில் உள்ளதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	119	திரு. எம். துரைக்கண்ணு, (கிராம பொதுமக்கள் சார்பாக) ஒலக்கூர் மற்றும் அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் 604 305.	திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஏரி மதகு வாய்க்கால் சீர் செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஏரி, நீர்வள நிலவளத்திட்டம் ஒங்கூர் உபவடிநிலப்பகுதி சிப்பம் எண்.10-ல் சேர்க்கப்பட்டுள்ளது. சிப்பம் 10-ல் 14 ஏரிகளை சீரமைக்க ரூ. 241.29 இலட்சங்களுக்கு மதிப்பீடு ஒப்புதல் கிடைக்கப்பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது. இம்மதிப்பீட்டில் ஒலக்கூர் ஏரியில் 2500 மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால் தூர்வாரவும் இரண்டு மதகுகளிலும் சிதைந்த முன்பகுதியை சரி செய்யவும் ரூ. 3.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மதகு பணி முடியும் தருவாயில் உள்ளது. வரத்து வாய்க்கால் மழைக்காலம் முடிந்ததும் செய்து முடிக்கப்படும்.	IAMWARM திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்றுவருவதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	122	திரு. P. கோடியான், ஒன்றிய தலைவர், திரு. R. சீனுவாசன், ஒன்றிய செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், உளுந்தூர்பேட்டை ஒன்றிய குழு, 3/17, சமீர் காம்ப்ளக்ஸ் மாடி, விருத்தாசலம் ரோடு, உளுந்தூர்பேட்டை.	உளுந்தூர்பேட்டை வட்டம், தாமல் அணையை பாதுகாத்து விவசாய பயன்பாட்டிற்கு அமைத்துத்தருவது சம்மந்தமாக.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
தாமல் அணைக்கட்டில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றும் பணி, அணை சீரமைத்தல் மற்றும் தூர்வாருதல் போன்ற அனைத்து பணிகளும் நீர்வள நிலவள திட்டத்தில் (மிகிவிகீவிலிவி) சேர்க்கப்பட்டு பணிகள் உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு துவங்கப்படும் நிலையில் உள்ளது. அணைக்கட்டில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். *[உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்.க.எண்.கோ.2சி/2011/உ.செ.பொ/க.குந்நாள் : 05-09-2011.]*	இப்பொருள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	124	திரு. எஸ்.கே.சம்பத், த/பெ.கண்ணன், சமூக சேவகர், பிள்ளையார் கோவில் தெரு, சிறுனாம்பூண்டி கிராமம், செஞ்சி வட்டம்.	தனி வாக்குச்சாவடி கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
கோரிக்கை ஏற்கப்பட்டது. சிறுனாம்பூண்டி கிராமத்திலிருந்து சேராணூர் கிராமம் சுமார் 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அக்கிராமத்திற்கு சென்று வாக்களிக்க சிறுனாம்பூண்டி கிராம பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்படி கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றினை சிறுனாம்பூண்டி கிராத்தில் மாற்றம் செய்திடலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. *[திண்டிவனம், வருவாய் கோட்ட அலுவலரின் கடித எண்.ந.க.அ2/ 1023/2011 நாள் : 24–08–2011.]*	செஞ்சி வட்டம், சிறுனாம்பூண்டி கிராமத்தில் வாக்குச்சாவடி அமைக்க அனுமதி வழங்கிவிடுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரடி ஆய்வின்போது குழுவிடம் தெரிவித்துள்ளதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	125	திரு. கே.முருகன், மூலநெல்லிமலை, செஞ்சி வட்டம்.	மூலநெல்லிமலையில் குடிநீர் கிணறு பழுதடைந்த நிலையில் உள்ளதை சீர் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மனுதாரர் தெரிவித்துள்ள மூலநெல்லிமலை கிராமத்தில் 2007–08 ஆம் ஆண்டு ஊராட்சி நிதி திட்டத்தில் திறந்த வெளி கிணறு வெட்டப்பட்டுள்ளது. அதில் சுவர் மதிப்பீட்டில் சேர்க்கப்படாமல் கிணறு பணி மட்டில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்று சுவர் கட்ட ரூ.2,00,000/– மதிப்பீடு ஆகும். எனவே நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும். *[செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் கடித எண்.அ4/1491/2011 நாள் : 30–08–2011].*	மனுதாரரின் கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
7	129	திரு. நா.காசிலிங்கம், கரையாம்பாளையம், சங்கராபுரம் வட்டம்.	கரையாம்பாளையம் கிராமத்திற்கு உலர்களம் அமைத்து தர கோரியது.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
உலர்களம் அமைத்திட இடத்தேர்வு செய்தும், தேவையான ஆவணங்களும் சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரிடம் 09-08-2011 அன்று கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. 22-08-2011 அன்று சம்பந்தப்பட்டவரை நேரில் சந்தித்து விவரம் தெரிவித்து ஆவணங்கள் கோரப்பட்டது. உலர்களம் அமைக்க ஆவணங்கள் எதுவும் சம்மந்தப்பட்டவரால் அளிக்கப்படவில்லை. மீண்டும் 20-10-2011 அன்று இவ்வலுவலக கடிதம் மூலம் சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவரை உலர்களம் அமைத்திட இடத்தேர்வு செய்தும், அதற்குரிய ஆவணங்களை சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒப்படைத்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இடத்தேர்வு செய்து தேவையான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்டு எதிர்வரும் திட்ட அறிவிப்பின்படி மேற்படி உலர்களம் அமைத்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயலாளர், விழுப்புரம் விற்பனைக்குழு விழுப்புரம் அவர்களின் கடித எண்.உ.1/5332/2011 நாள் : 09-08-2011, 14-09-2011 மற்றும் 20-10-2011.]*	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
8	134	திரு. எ.கே.பாலு, த/பெ. குலோத்துங்கன் 61, மேல வீதி, திருக்கோவிலூர்.	ஆவியூரான் மற்றும் சித்தேரியான் வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
திருக்கோயிலூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஆவியூரான் மற்றும் சித்தேரியான் வாய்க்கால் தற்சமயம் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியில் 32.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் 06–08–2011 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திருக்கோயிலூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தலைமையில் வருவாய் வட்டாட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் செயல் அலுவலர் கொண்ட குழு அமைத்து சர்வே செய்து மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவது மற்றும் வாய்க்காலை சீரமைப்பது தொடர்பாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் அவர்களின் கடித எண் ந.க.எண்.2368/2011பேரூ3 நாள் : 20–08–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	148	திரு. நா.காசிலிங்கம், தபெ.நாராயணசாமி, கரையாம்பாளையம், எடுத்தனூர் அஞ்சல், சங்கராபுரம் வட்டம்.	கரையாம்பாளையம்–அருதங்குடி சாலையில் கி.மீ.3/8–ல் உள்ள குழாய் பாலத்தை மேம்பாலமாக கட்டுதல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மேற்காண் மனுவில் பாலம் அமைக்க கோரியுள்ள இடமானது இக்கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள அருதங்குடி–கரையாம்பாளையம் சாலையில் கி.மீ.3/8–ல் தற்போது 9 வரிசையுடன் உள்ள குழாய் தம்போகியை உயர்மட்டபாலமாக மாற்றி அமைக்க அடுத்து வரும் 2012–13 சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து கருத்துருக்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் *[கோட்டப் பொறியாளர்(நெ), க(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண். 1790.2011/இவஅ/நாள் : 11–08–2011.]*	2012–13 நிதியாண்டில் சி.ஆர்.ஐ.டி.பி திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ ஜயதே
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
10	158	திரு. A. ரங்கன், தலைவர், திரு. V.R. தங்கராசன், செயலாளர், கள்ளக்குறிச்சி நகர மக்கள் நல மன்றம், 5, கடைவீதி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி பெரிய ஏரி ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
நீர்வள நிலவள திட்டப்பணியில் (IAMWARM) பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது. பணி துவங்கப்படுவதற்கு முன்பாக ஆக்கிரமிப்பு அகற்றிட வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி அவர்களிடம் மேற்படி பெரிய ஏரியின் ஆக்கிரமிப்பு விபரப் பட்டியல், படிவம்–I கேட்கப்பட்டுள்ளது. படிவம்–I கிடைக்கப்பெற்றவுடன் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி செய்யப்படும். *[உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் க.எண்.கோ.2சி/2011/உ.செ.பொ/க.குநாள் : 05–09–2011.]*	மனுதாரரின் கோரிக்கை திட்டத்தில் தொடர் நடவடிக்கையில் உள்ளதாக உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித் துறை வெள்ளாறு வடிநில கோட்டம் கள்ளக்குறிச்சி அவர்கள் ஆய்வின்போது தெரிவித்ததனை தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	165	திரு. ஆர்.ஜி.சரவணன், மாவட்ட அமைப்பாளர் மனித உரிமைகள் கழகம், அனந்தபுரம், செஞ்சி வட்டம்.	அனந்தபுரம் என்ற ஊரில் புதிய தீயணைப்பு நிலையம் திறக்க கோரல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
அரசினது முன்னுரிமை பட்டியலில் இடம் பெற்று அரசினரிடமிருந்து அனந்தபுரம் என்ற இடத்தில் புதிய தீயணைப்பு நிலையம் திறக்க அரசிடமிருந்து ஆணைகள் பெறப்பட்டவுடன் தீயணைப்பு நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.10436/அ2/08 நாள் : 14-10-08ல் இயக்குநருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. *[கோட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை விழுப்புரம் கோட்டம், விழுப்புரம் அவர்களின் க.எண்.8075/ஆ1/ 2011 நாள் : 10-08-2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
12	169	திரு. வி. மணி எழிலன் எம்.ஏ., செயலாளர், நகர நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், 4, பரிசப்பிள்ளை தெரு, தியாகதுருகம்.	தியாகதுருகம் பேரூராட்சியில் அமைந்துள்ள பொது நூலக கட்டிடத்திற்கு புத்தகங்கள் வைக்க கூடுதல் கட்டிடம் அமைக்க கோரல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
தியாகதுருகம் பேரூராட்சி செயல் அலுவலர் ந.க.எண்.அ1/481/2011 நாள் 17-08-2011 தேதிய கடிதம் வாயிலாக திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களுக்கு இக்கட்டிட விரிவாக்கப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தரக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் மண்டலம் அவர்களின் கடித எண் ந.க.எண்.2368/2011/பேரூ3 நாள் : 20-08-2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	172	திரு. டி. தவமணி, த/பெ. தேவநாதன், பேரங்கியூர் அஞ்சல், உளுந்தூர் வட்டம்.	புதியதாக சாலை அமைக்க கோருவது சம்மந்தமாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மேற்காண் மனுவில் சீரமைக்க கோரியுள்ள சாலையானது இக்கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள விருத்தாசலம்–உளுந்தூர்பேட்டை–விழுப்புரம் என்கிற மாநில நெடுஞ்சாலையில் கி.மீ.43/6–43/8 சாலைப் பகுதியாகும். இந்த சாலைப்பகுதியை சி.ஆர்.ஐ.டி.பி 2011–12 திட்டத்தில் எடுக்க முடியாமல் விடுபட்டு உள்ளதால் தனிச்சீர் பணிகள் மூலம் மேம்பாடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். *[கோட்டப்பொறியாளர்(நெ), க(ம)பு, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்1790/2011–2/இவ.அ/நாள்: 04–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	176	திரு. கா.மணி, D.E.E.E., ஒன்றிய மாணவராணி செயலாளர், ஊராட்சி மன்ற தலைவர், சிறுவத்தூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி வட்டம், சிறுவத்தூர் கிராமம் மயூரா நதி அணைக்கட்டு சீரமைத்தல், வாய்க்கால் பாசனம் சீரமைத்தல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
நீர்வள நிலவள திட்டத்தில் (IAMWARM) சேர்க்கப்பட்டு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும் நிலையில் உள்ளது. சிறுவத்தூர் அணை மற்றும் ஏரிக்கு செல்லும் வரத்து வாய்க்கால் தூர்வாரி புதுப்பித்து செய்து கொடுக்கப்படும். *[உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் க.எண்.கோ.2சி/2011/உ.செ.பொ/க.குநாள் : 05–09–2011.]*	மனுதாரரின் கோரிக்கை IAMWARM திட்டத்தில் தொடர் நடவடிக்கையில் உள்ளதாக உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை வெள்ளாறு வடிநில கோட்டம் கள்ளக்குறிச்சி அவர்கள் ஆய்வின்போது தெரிவித்ததனை தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	178	திரு. டி. நாகராஜ், 6வது வார்டு, பெரியசெவலை & அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வழி, உளுந்தூர்பேட்டை வட்டம்.	பெரியசெவலை சர்க்கரை ஆலை எதிரில் சிறு மின் விசை பம்பு மற்றும் மினி டேங்க் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பெரியசெவலை சர்க்கலை ஆலை எதிரில் சிறு மின் விசை பம்பு மற்றும் மினி டேங்க் அமைத்து தரப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், திருவெண்ணெய்நல்லூர் அவர்களின் கடித எண் ந.க.எண்.ஆ5/ 1477/2011 நாள்: 4-11-2011]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் கருக்கம். (4)
16	180	திரு. கு. தாணிதரன் த/பெ. குப்புசாமி 66, உடையார் தெரு, கடலூர் ரோடு, வளவனூர்.	35வது வார்டு உடையார் தெருவில் வாய்க்கால் மற்றும் வடிகால் பாலம் அமைக்க கோருதல்

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
வளவனூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 3வது வார்டில் அமைந்துள்ள உடையார் தெரு சாலை மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலை என்பதால் அதன் குறுக்கே வடிகால் பாலம் அமைக்க செயற்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, விழுப்புரம் அவர்களிடமிருந்து உரிய அனுமதி பெறப்பட்டு எதிர்வரும் நிதியாண்டில் திட்ட நிதி வரப்பெற்றதும் முன்னுரிமையின் அடிப்படையில் வடிகால் பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் மண்டலம் அவர்களின் கடித எண். ந.க.எண்.2368/2011/பேரூ3 நாள் : 20-08-2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	189	திரு. என்.சுப்பிரமணியன் த/பெ நடேசக் கவுண்டர் செ.குன்னத்தூர் அஞ்சல், செஞ்சி வட்டம்.	1) திண்டிவனம் முதல் வி.நல்லாளம் செல்லும் தடம் எண்.டி28–ஐ வெளவால்குன்றம் வழியாக கல்லாலிப்பட்டு வரை நீட்டிப்பு செய்தல். 2) செஞ்சியில் இருந்து, செஞ்சி முதல் மேல்கூடலூர் வழியாக பெரியதச்சூர் வரை இயக்கப்படும் டி.15 பேருந்தை பகலில் இரண்டு நடைகள் இயக்க அனுமதிக்க வேண்டும்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
1) திண்டிவனம் முதல் கூட்டேரிப்பட்டு செண்டூர், பேரணி வழியாக நகரத்தடம் டி–28 மூலம் ஒரு நடையும், திண்டிவனம் முதல் கூட்டேரிப்பட்டு, மயிலம், செண்டூர், பேரணி வழியாக வி.நல்லாளம் வழியாக ஒரு நடையும் இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து வி.நல்லாளம் முதல் வெளவால்குன்றம் வழியாக கல்லாலிப்பட்டுக்கு நீட்டிப்பு செய்தால் 9.0 கி.மீ. தூரம் வழித்தட நீளம் அதிகமாகிறது. மேலும் மேற்படி நகரப் பேருந்து பல்திசை வழித்தடத்தில் இயக்கப்படுவதால் மற்ற கிராமங்களுக்கு செல்லும் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுவதுடன் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் சூழ்நிலையும் உருவாகும். 2) செஞ்சி கிளையில் இருந்து இயக்கப்படும் நகரத்தடம் டி–15 செஞ்சி முதல் மேல்கூடலூர் வழியாக பெரியதச்சூர் வரை இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி நகரத்தடம் டி–15 பல்திசை வழித்தட திட்டத்தின்படி 6 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருவதால், இப்பேருந்தின் கால அட்டவணையில் போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் இப்பேருந்தின் மூலம் பகல் நேரத்தில் கூடுதல் நடைகள் அளித்திட வாய்ப்பு இல்லை. *[விழுப்புரம், மேலாண் இயக்குநர் (த.நா.அ.போ.கழகம்) அவர்களின் கடித எண்.168/போ.வ.5/த.நா.போ.க.(வி)2011 நாள் : 19–08–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
18	199	திரு. சா.ஆறுமுகம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கொஞ்சுமங்கலம் ஊராட்சி, வானூர் வட்டம்.	கிளியனூர்–எடச்சேரி சாலையின் ஓரம் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மேற்படி சாலையின் எல்லை பற்றி வருவாய் துறை அலுவலர்களால் அளந்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஆக்கிரமிப்பு செய்துள்ள நில உரிமையாளர்களுக்கு 10/2011 இல் ஆக்கிரமிப்புகளை காலி செய்யக்கோரி இத்துறை வாயிலாக நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் தளர்த்தப்பட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், மழை முடிவுற்றதும் தேதி குறிப்பிட்டு அறிவிப்பு செய்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். *[கோட்டப் பொறியாளர் கட்டுமானம் & பராமரிப்பு நெடுஞ்சாலைத்துறை, விழுப்புரம் அவர்களின் கடித எண்.2181/ 2011/இவ.அ1 நாள் : 30–08–2011 (ம) 01–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
19	201	திரு. கோ. தர்மதுரை, த.வி.ச. ஒன்றிய பொருளாளர், தாமல் கிராமம், ம. குன்னத்தூர் அஞ்சல், உளுந்தூபேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	திருக்கோவிலூர் சாலையை செப்பனிட்டு நகரத்தடம் எண் டி8 கூடுதல் நடை இயக்க கோரிக்கை.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
திருக்கோவிலூர் கிளையில் இயக்கப்படும் நகரத்தடம் எண்.டி8 ஆரம்பம் முதல் தாமலுக்கு 8 நடைகளும், திருநறுங்குன்றத்திற்கு 4 நடைகளும், திருநறுங்குன்றத்திற்கு 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. இதுவரை தாமலுக்கு நடைகள் எதுவும் குறைக்கப்படவில்லை. சாலை சரியில்லாததால் பயண நேரம் கூடுதலாகிறது. சாலை செப்பனிடுதல் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. *[கடித எண் 212/போ.வ.7/த.நா.போ.க.(வி)/2011, நாள் : 18–08–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	203	திரு. அ. மனோகரன், காலையாம்பாளையம் அஞ்சல், வளவனூர் (வழி), விழுப்புரம் வட்டம்.	சாலையாம்பாளையம் கிராமத்திற்கு தார் சாலை சீர்செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
2011–12ஆம் ஆண்டு நிதி ஆண்டில் மேற்படி சாலையை ரூ. 50.00 லட்சத்திற்கு அபிவிருத்தி செய்ய அரசிற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. அரசு ஆணை எண். 119/நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை நாள்: 24–10–2011ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 25–11–2011 அன்று ஒப்பந்தம் அழைக்கப்பட்டுள்ளது. *[கோட்டப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு நெடுஞ்சாலைத்துறை, விழுப்புரம் அவர்களின் கடித எண் 2181/2011/இவஅ1இ நாள்: 30–08–2011 மற்றும் 1–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
21	206	அ. சிவானந்தம், த/பெ. அப்பாசாமி, சீர்ப்பனந்தல் அஞ்சல், சங்கராபுரம் வட்டம்.	தற்போது உள்ள குழாய் பாலத்தை மேம்பாலமாக கட்டுதல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மேற்காண் மனுவில் பாலம் அமைக்க கோரியுள்ள இடமானது இக்கோட்டத்தினை பராமரிப்பிலுள்ள இளையனார்குப்பம்–மணியந்தல் (வழி) சீர்பனந்தல் சாலை கி. மீ. 0/0–5/0 என்கிற மாவட்ட இதர சாலையில் கி.மீ. 1/10ல் தற்போது உள்ள 10 வரிசையுடன் கூடிய குழாய் தம்போகி பாலமாகும். இதனை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க அடுத்து வரும் 2012–13 சி. ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து கருத்துருக்கள் அரசுக்கு சமர்பிக்கப்படும். *[கோட்டப்பொறியாளர் (நெ), க.நெ.நெ.ப. கள்ளகுறிச்சி அவர்களின் கடித எண் 1790/2011/இவ.அ/நாள் : 11–08–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
22	209	திரு. ஏ. இராமகிருஷ்ணன், கோணை மற்றும் அஞ்சல், செஞ்சி வட்டம்.	நல்ல சுவையுமான குடிநீர் கிடைக்க வழிவகை செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மேற்கண்ட மனுதாரர் கோரிக்கையில் தெரிவித்துள்ள பழைய திறந்த வெளி கிணறு சுற்று சுவர் இடிந்த நிலையில் உள்ளதாலும், தற்போது பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும் தண்ணீர் வடிந்தவுடன் ஒன்றியத்தின் நிதி ஆதாரம் பெற்று பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். *[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், செஞ்சி அவர்களின் கடித எண் அ4/1491/2011, நாள் : 29–08–2011.]*	மனுதாரர் கோரிக்கை தொடர் நடவடிக்கையில் உள்ளதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற சட்டப்பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	1390	திரு. எம்.ஜி. இராமசந்திரன், 3ஏ, அன்னை தெரு, மடிப்பாக்கம், சென்னை–91.	செஞ்சி வட்டம் மேல்சேவூர் கிராமம், அருள்மிகு ரிஷபபுரீஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றி நான்கு புறமும் 30 அடியில் சிமெண்ட் சாலை அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேற்படி திருக்கோயிலில் நிதிவசதி இல்லாத காரணத்தினால் திருக்கோயிலுக்கு, வெளியே திருக்கோயிலைச் சுற்றி 30 அடியில் சிமெண்ட் சாலை அமைத்து தரவும் மற்றும் ஆற்றின் கரையில் தடுப்பு சுவர் கட்டிதரவும் இயலாது எனவே மேற்படி பணிகளை மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்வதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

[உதவி ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை, 46, வி.ஜி.பி. நகர் (மேற்கு), விழுப்புரம் அவர்களின் கடித எண் 3100/2011/ ஆ4/நாள் : 03–11–2011.]

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
24	2722	திரு. பி. சின்னசாமி, த/பெ. பாவாடை, தூத்துக்குடி, ஆசனூர் (வழி), கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்–605 305.	விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகம் ஒன்றியம் கூத்தக்குடியிலிருந்து நின்னையூர் வழியாக, தியாகதுருகம் செல்லும் வழியில் மணிமுத்து ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
கூத்தப்குடியிலிருந்து நின்னையூர் வழியாக தியாகதுருகம் செல்லும் வழியில் மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைப்பது இத்துறை சார்ந்தது அல்ல. சம்மந்தப்பட்ட சாலை தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையாகும். எனவே மேற்படி பாலம் அமைக்கும் பணியை தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக மேற்கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். *[கோட்டப்பொறியாளர் (நெ), க.(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண் 2268–1/2011/இவ.அ(3), நாள்: 3–11–2011]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
25	2724	க. பாண்டுரங்கன், த/பெ.கணபதி, அசகளத்தூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி–அடரி சாலையில் அசகளத்தூர் அருகில் மையூரா நதியில் மேம்பாலம் கட்ட வேண்டுதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
அடரி சாலையில் மையூரா நதியில் மேம்பாலம் அமைத்துத் தர கோரியுள்ள சாலையானது இக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள தியாகதுருகம்–அடரி சாலை கி.மீ.0/0–20/2 என்கிற மாவட்ட முக்கிய சாலையில் கி.மீ. 18/2–ல் மையூரா நதி குறுக்கிடும் இடமாகும். மேற்படி இடத்தில் நபார்டு வங்கி நிதி உதவியின் மூலமாக மேம்பாலம் அமைப்பதற்கு ரூ. 700.00 இலட்சம் கோரி கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. *[கோட்டப்பொறியாளர் (ஒரு), க.(ம)டி கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண் 2268/2011/இவ.அ(3), நாள்: 3–11–2011]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	2726	திரு. சு. பாலசுப்பிரமணியன், த/பெ சுப்பிரமணியன், எறஞ்சி, ஆசனூர் (வழி), கள்ளக்குறிச்சி (வட்டம்), விழுப்புரம் மாவட்டம்.	விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் ஒன்றியம் எறஞ்சி முதல் காச்சக்குடி இடையே (2.50 கிலோ மீட்டர்) தார் சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரரால் சீரமைத்து தரக் கோரியிருக்கும் சாலையானது இக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள காச்சக்குடி சாலை கி.மீ. 0/0.2/6 என்ற மாவட்ட இதர சாலை ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்ய இந்த வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமான அளவு இல்லாததால் எந்த திட்டத்திலும் எடுத்துக் கொள்ள இயலவில்லை. அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமை அடிப்படையில் இச்சாலையினை மேம்பாடு செய்ய தேர்வு செய்யப்படும் என்பதையும் இடைப்பட்ட காலத்தின் தற்போது உள்ள பருவ நிலை சீரானதும் இச்சாலையில் உள்ள நொடிகள் துறையின் வருடாந்திர பராமரிப்பின் மூலம் சீர் செய்யப்பட்டு ஏற்றவாறு சரிசெய்யப்படும். *[கோட்டப்பொறியாளர் (நெ), க.(ம)ப, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண் 2269/2011/இவஅ(3), நாள் : 2–11–2011]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
27	2729	திரு. கே. சகாதேவன், த/பெ. கருப்பு, கிராம பொதுமக்கள் 1. பிச்சநத்தம் 2. பரமனத்தம் ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி.	பிச்சநத்தம், பரமனத்தம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு செல்லும் பிச்சநத்தத்தில் தரைபாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
1. கல்லேரிக்குப்பம் சாலையில் தரைபாலம் பரமனத்தத்திலிருந்து கி.மீ. 4.5ல் உள்ளது. இந்த தரைபாலம் கண் பைப்பால் அமைக்கப்பட்டுள்ளது. (2–0பைப்) மழைக்காலத்தில் தண்ணீர் வரத்து அதிகமாக இருப்பதால் பைப் வழியாக போதுமான தண்ணீர் செல்ல முடிவில்லை. வரத்து தண்ணீர் பாலத்தின் பக்கவாட்டில் குத்தி சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே கல்லேரிக்குப்பம் சைடில் 2 மீட்டர் கண் உள்ள கான்கிரீட் பாலம் அமைக்க வேண்டும். மேலும் 25 மீட்டருக்கு இருபுறமும் தடுப்பு சுவர் கட்ட வேண்டும். பாலத்தின் அணுகு சாலை அமைக்க வேண்டும். மொத்த மதிப்பீடு சிறுபாலம்+தடுப்பு சுவர்+ அணுகு சாலை ஆகிய அனைத்தையும் சேர்த்து 5.00 லட்சம் மதிப்பீடாகும். 2. கிலோ மீட்டர் 0.8ல் பைப் பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒடையில் மழைகாலத்தில் அதிக தண்ணீர் வரத்து உள்ளது. அமைக்கப்பட்டுள்ள பைப் பாலம் தண்ணீர் வரத்தை தாங்கும் அளவிற்கு இல்லை. ஆகையால் பாலத்தின் பக்கவாட்டை தாக்கி சாலை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. ஆகவே அமைக்கப்பட்டுள்ள சிறுபாலத்தை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கான்கிரீட் சிலஸ் பாலம் அமைக்கப்படவேண்டும். ஒடையின் அகலம் 4 மீட்டர் உள்ளதால் 2 மீட்டர் அளவு உள்ள இரு கண் கான்கிரீட் பாலம் அமைத்து இருபுறமும் 25 மீட்டர் தடுப்புசுவர் அணுகு சாலையும் சீர்செய்தல் வேண்டும். இதற்கு பாலம் கூடி தடுப்பு சுவர் மற்றும் அணுகுசாலை மொத்த மதிப்பீடு ரூ. 7.00 லட்சமாகும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண் அ2/2224/2011, நாள்: 04–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY வெல்லும் TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
1	121	திரு. வி. கணேசன் மற்றும் ஊர் பொதுமக்கள், ஏமப்பேர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம்.	கள்ளக்குறிச்சி வட்டம், ஏமப்பேர் ஏரியில் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மேற்படி ஏரியில் இருந்த ஆக்கிரமிப்பை 04–08–2011 அன்று கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் தலைமையில் கள்ளக்குறிச்சி வருவாய் ஆய்வாளர், நில அளவையர் மற்றும் பொதுப்பணித் துறையினர் ஆகியோருடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. *[உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., வெள்ளாறு வடிநில உபகோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண் கோ.2சி/2011 உ.செ.பொ/க.கு/ நாள்: 05–09–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	127	திரு. மனோகரன், ஓரத்தூர்.	ஓரத்தூர் பழைய ஆதிதிராவிட குடியிருப்பு பகுதியில் புதிதாக சிறுமின் விசை இறைப்பான் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
ஓரத்தூர் ஊராட்சி–ஓரத்தூர் பழைய ஆதிதிராவிட குடியிருப்பு பள்ளப் பகுதியில் 2011–12ம் ஆண்டு ஒன்றிய பொதுநிதியிலிருந்து ரூ. 1.00 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக போர் போட்டு சிறுமின் விசை இறைப்பான் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. *[ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், விக்கிரவாண்டி அவர்களின் கடித எண் ந.க. அ4/2376/2011, நாள் : 03–11–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	128	திரு. கோ. தர்மதுரை, த.வி.ச. ஒன்றிய பொருளாளர், தாமஸ் கிராமம், ம. குன்னத்தூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	திருக்கோவிலூர் கிளையில் இயக்கப்படும் நகரத்தடம் எண்.16 தாமல் கிராமம் வரை நீட்டித்து இயக்க கோரிக்கை.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
திருக்கோவிலூர் கிளையில் இயக்கப்படும் நகரத்தடம் எண்.16 திருக்கோவிலூர்–கொண்டசமுத்திரம் வரை இயக்கப்படுகிறது. இத்திட்டத்தினை கொண்டசமுத்திரத்திலிருந்து தாமல் கிராமம் வரை 05–11–2011 முதல் நீட்டித்து இயக்கப்பட உள்ளது. *[மேலாண் இயக்குநர், தநா அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் அவர்களின் கடித எண் 212/போவ7/த.நாஅபோக(வி)/2011, நாள் : 18–08–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	150	திரு. துரைக்கண்ணு, ஒலக்கூர் கிராமம், பொதுமக்கள் சார்பாக.	குடிநீர் தன்னிறைவு அடைதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முழு தன்னிறைவு அடைய கோரிய மனு மீது ஒலத்தூர் கிராமத்திற்கு மக்கள் தொகை அடிப்படையில் அரசு விதி முறைப்படி போதுமான அளவிற்கு குடிநீர் வசதி செய்து முடிந்துள்ளதாக திண்டிவனம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய, உதவி செயற்பொறியாளர் (கு.வா) தெரிவித்துள்ளார். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், ஒலக்கூர் அவர்களின் கடித எண் அ4.2027/2012, நாள் : 25–08–2011.]*	மனுதாரரின் கோரிக்கை முடியும் தருவாயில் உள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	152	திரு. வெ. ஏழுமலை, உறுப்பினர் தமிழ்நாடு பிற்பட்டோர் ஆணையர், 15, சுப்புராயன் தெரு, செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.	செஞ்சி அரசு மருத்துவமனையில் பழுதடைந்துள்ள குளிர்பதன அமரர் அறை இயந்திரத்தை சரிசெய்யக் கோருதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
இப்பொருள் தொடர்பாக செஞ்சி அரசு மருத்துவனையில் 9 Body Cold Storage பழுதடைந்ததை Trans-Cold Engineering, Salem என்கிற நிறுவனம் மூலம் 12–08–2011 அன்று நேரிடையாக ஆய்வு செய்து எஞ்சினில் உள்ள கோளாறுகள் மற்றும் அனைத்து பழுதுகளை நீக்கி தற்போது நல்ல நிலையில் இயங்கி கொண்டு வருகின்றது. இறந்தவர் சடலங்களை தொடர்ந்து பாதுகாக்கப்படுகின்றது என விழுப்புரம் பொதுப்பணித் துறை இளநிலை பொறியாளர் அவர்களின் கடித எண் இ.சி.பொ/மின்/விழு/கோ–1/2011, நாள்: 18–08–2011ன்படி பழுது நீக்கத்தை உறுதி செய்யப்பட்டதாக கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் என இப்பொருள் தொடர்பாக 31–10–2011 நாளிட்ட கடிதத்தின் மூலம் செஞ்சி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், இனிவருங்காலங்களில் இவ்வாறு நிகழாவண்ணம், கற்றுப்புறசூழல் சீர்கேடு அடையாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். *[இணை இயக்குநர் நலப்பணிகள், விழுப்புரம் அவர்களின் கடித எண் 5351/ப2/2012, நாள்: 11–08–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
6	154	திரு. ட்டி. லோகநாதன், த/பெ. திருமால்கவுண்டர், மேட்டுத்தெரு, தமுதாளி மற்றும் அஞ்சல், திண்டிவனம் வட்டம், மயிலம்.	மனுதாரரின் விளைநிலத்திற்கு அருகில் இயங்கிவரும் மேக் எக்ஸல் என்ற நிறுவனத்தின் கழிவுகளால் விளைநிலம் பாதிப்பு குறித்து.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மனுதாரரின் புகார் தொடர்பாக திள். மேக் எக்ஸல் லிட், என்ற நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு முகாந்திர கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனமானது உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் உரிய மேல்நடவடிக்கைக்காக வாரியத்திற்கு பரிந்துரைக்கப்படும். [மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழுப்புரம் அவர்களின் கடித எண். கோ. 0051/ மாசுகுபொ/விழு/2011, நாள் : 18–08–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	167	திரு. கே. சீனுவாசன், த/பெ. கலுவராயன், பூவனூர், வடமாம்பாக்கம், கிளியூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.	உளுந்தூர்பேட்டை அருகில் உள்ள பூவனூர் கிராமத்திற்கு திருக்கோவிலூர் கிளையில் இயக்கப்படும் நகரத் தடம் எண்.17 நத்தாமூர் வரை வந்து செல்வதாகவும், மேற்படி தடத்தை பூவனூர் வரை நீட்டித்து பேருந்து வசதி செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
திருக்கோவிலூர் கிளையில் இயக்கப்படும் நகரத் தடம் எண். டி.17ல் திருகோவிலூர்–நத்தாமூர் செல்லும் நடையை பூவனூர் வரை நீட்டித்து 07–11–2011 முதல் இயக்கப்பட உள்ளது. *[தநா. அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் அவர்களின் கடித எண் 212/போவ7/தநாஅபோக (வி)/2011, நாள்: 18–08–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	181	திரு. சேவல், அ. மனோகரன், ஒன்றிய இளைஞரணி தலைவர், கிளைக்கழக செயலாளர், சாலையம்பாளையம், வளவனூர், விழுப்புரம்.	சாலையம்பாளையம் எஸ்.எஸ் 1 மின் மாற்றியில் இருந்து நீர்த்தேக்க தொட்டிக்கு வரும் மின் கம்பிகளை மாற்றுதல் சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
சாலையம்பாளையம் எஸ்.எஸ். 1 மின் மாற்றியில் இருந்து நீர்த்தேக்க தொட்டி மின் இணைப்புக்கு வரும் மின் பாதையில் உள்ள மின்கம்பிகளை மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி வேலை 04–11–2011க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. *[மேற்பார்வை பொறியாளர் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம் அவர்களின் கடித எண்1535, நாள்: 3–11–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
9	187	திரு. கா.மணி, ஊ.ம.த. சிறுவந்தூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம்.	தடம் எண். டி33, சின்னசேலம்–ஈரியூர் வழித்தடம், நாளொன்றுக்கு 4 நடைகள் இவ்வழித்தடத்தில் இயங்கி வந்தது. காலை 8.30 மணிக்கு வரக்கூடிய இயக்கம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அந்நடையினை இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
தடம் எண்.33, இப்பேருந்து துவக்கப்பட்ட நாளிலிருந்து சின்னசேலம்–ஈரியூர் வழித்தடத்தில் மதியம் நேரத்தில் இரு நடைகளும் மாலை நேரத்தில் இரு நடைகளும் ஆக நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இவ்வழித்தடத்தில் இன்றுவரை எந்தவொரு நடைகளும் துண்டிக்கப்படவில்லை. இப்பேருந்தில் காலை நேரத்தில் சின்னசேலம்–செல்லியாம்பாளையம் மற்றும் கள்ளக்குறிச்சி–அணைக்கரைக்கோட்டலம் வழித்தடப் பகுதியில் உள்ள பள்ளி மாணவர்கள் பள்ளி செல்வதற்காக பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. [மேலாண் இயக்குனருக்காக கடித எண் 190/போ.வ.6/த.நா.போ.க. (வி)/2011, நாள் : 17–08–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
10	188	திரு. கா. மணி, ஊ.ம.த., சிறுவந்தூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம்.	தடம் எண்.டி.1பி, கள்ளக்குறிச்சி–மேலூர் வழித்தடத்தினை சிறுவத்தூர் வரை நீட்டித்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
தடம் எண்.டி.1பி., பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டு கள்ளக்குறிச்சி–மேலூர் வழித்தடத்தில் காலை நேரத்தில் இயக்கப்பட்டு வரும் இரு நடைகளை மட்டும் 20–08–2011 முதல் நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது. *[மேலாண் இயக்குனருக்காக கடித எண் 190/போ.வ.6/த.நா.போ.க. (வி)/2011, நாள் : 17–08–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	194	திருமதி. விசாலாட்சி, க/பெ முத்துகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர், கொஞ்சுமங்கலம் வானூர்.	கொஞ்சுமங்கலம் கிராமத்திற்கு ரோட்டின் ஓரமாக உயர் மின்னழுத்த கம்பி அமைத்து தடையில்லா மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தல் தொடர்பாக.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
கொஞ்சுமங்கலம் கிராமத்திற்கு 33/11 கே.வி கிளியனூர் துணைமின் நிலையத்திலிருந்து 11 கே.வி மின்பாதை மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்பாதை சவுக்கு மரங்கள் உள்ள பகுதி வழியாக செல்வதால் இரவு நேரங்களில் ஏதேனும் மின்தடை ஏற்படும் போது கொஞ்சுமங்கலம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. மேற்கண்ட நிலைமையை சரிசெய்ய மாற்று இணைப்பு பாதை அமைக்க மதிப்பீடு தயார்செய்து அனுமதியும் அளிக்கப்பட்டுவிட்டது. அதற்குண்டான வேலைகள 08–11–2011–க்குள் முடிக்கப்படும். *[மேற்பார்வைப் பொறியாளர் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின்வார வாரிய விழுப்புரம் அவர்களின் கடித எண் 1536, நாள் : 3–11–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
12	211	பி. மண்ணாங்கட்டி, மல்ராஜகுப்பம், பி. புதூர், விழுப்புரம் மாவடடம்.	மின் இணைப்பு கோரி.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் குறிப்புரை. (6)
மனுதாரர் கோரியுள்ள மேல் நீர்தேக்கத் தொட்டி மின் இணைப்பு பெற்று நடைமுறைக்கு கொண்டுவரும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விண்ணப்ப பதிவுக் கட்டணமும் மற்றும் மின் இணைப்பு கட்டணமும் செலுத்தி மின் கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. 4–11–2011 அன்று மின் வாரியத்தால் மின் இணைப்பு வழங்கப்படும் என உதவி கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளார் என்பதை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. *[ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஊராட்சி ஒன்றியம், கண்டமங்கலம், அவர்களின் கடித எண். ஆ.5/384/2011, நாள் : 3–11–2011]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி ஐமாலுதீன்,
செயலாளர்.